Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 24 [08-07-93] வியாழக்கிழமை ஓசை 140

## உப தபால் அதிபர்களுக்கு சம்பள உயர்வுபெற முயற்சி

உப தபால் அதிபர்களுக்கு 30 சத வீத சம்பள உயர்வும் 260 ரூபா வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்க அமைச்சரவையின் அனுமதியைப்பெற பதில்தபால்மா அதிபர் நடவடிக்கை எடுத்து வருகிறார். மேற்படி சங்கத்தின் தூதுக்குழுவொன்று சமீபத்தில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே பதில் தபால்மா அதிபரைச் சந்தித்தது. உபதபாலதிபர்கள் முன்வைத்த கோரிக்கைகளில் பின்வரும் கோரிக்கைகளை அமைச்சரவைக்கென முன் வைக்கப்பட்டு அதில் இணக்கம் காணப்பட்டுள்ளது. உப தபாலதிபர்களின் சம்பளம் 30 சத வீதத்தால் அதிகரிப்பது,இந்த அதிகரிப்பு 500ரூபாவுக்கு மட்டுப்படுத்தப்படுள்ளது. 260 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி வழங்குவது. அலுவலகக் கொடுப்பனவுகளை வழங்குவது, அத்துடன் வேறு சிறு கொடுப்பனவுகளை வழங்குவது இதன்படி உப தபாலதிபர்களின் சம்பளம் 3185 ரூபா

(4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலை ஆசிரியர் குழுவின் குற்றச்சாட்டு முட்டாள்தனமானது!

## செஞ்சிலுவை பிரதிநிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினுள் ஊடுருவியுள்ளது என மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரின் 'ஒப்சோவர்' பத்திரிகை அறிக்கை முட்டாள்தனமானது என்று சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி பியட் சுவிட்சர் 'புலிகளின் குரல்' வானொலிக்குத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் நம்பகத்தன்மை சந்தேகத்துக்குரியதாகியுள்ளது எனவும், இக்குழுவில் விடுதலைப்புலிகள் ஊடுருவியுள்ளனர் எனவும், சிறிலங்கா நெருக்கடி சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் சர்வதேச செஞ்சிலுவைக்குழு ஒரு நேர்மையான தரகராக நடந்து கொள்ளும் என்ற உள்ளூர் சர்வதேச மட்டத்து எதிர்பார்ப்புகள் நம்பிக்கையற்றதாகி விட்டன எனவும் மனித உரிமைக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையை 'ஒப்சோவர்' பத்திரிகை வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

முன்னர் இவ்வாறு 'டெய்லி நியூஸ்' தினசரி ருகுணு கப்பலில புலிகள் கொள்ளையடித்ததாக வெளியிட்ட செய்தியைப் போன்றதே இதுவும்என அவர் கூறினார். போர்க்கை திகள் விடுதலை விடயம் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான விடயம்.இதில்செஞ்சிலுவை சங்கம் எந்த தொடர்பையும் கொண்டிருக்கவில்லைஎனவும் சுவிட்சர் மேலும் தெரிவித்தார்.

## நிவாரணப் பொருள்கள் துரிதவிநியோகத்திற்கு முடிவு

(யாழ்ப்பாணம்)

ஜூன் மாதம் நான்குவாரங்களுக்கும் உரிய இலவச நிவாரண முத்திரைகளுக்கான பொருள்களை துரித கதியில் விநியோகிக்க யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக தேவையான உணவுப் பொருள்கள் சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகிக்கும் பணி ஆரம்பமாகிவிட்டதாக புனர்வாழ்வுப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் உணவு விநியோகத்திற்கான உணவு முத்திரைகள் எடுத்துவருவதில் தாமதநிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 'குமாரி' கப்பல் மூலம் உணவுமுத்திரைகள் வந்ததும் அவைகிராமசேவையாளர்களூடாக துரிதமாக விநியோகிககப்படும். உடனடியாகவே அவற்றிற்குரிய உணவுப் பொருள்கள் அந்தந்தப் பகுதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் நீதிமன்ற அதிகாரி பொலிஸ்நிலையத்தில் தடுப்பு

நீதவானின் சூட்கேஸைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டாத அதிகாரி பொலிஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டார்.

அண்மையில் புத்தளம் கற்பிட்டி இறங்குதுறையில் இடம்பெற்ற ஆச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது. மன்னார் நீதிமன்ற அதிகாரி ஒருவரிடம் நீதிவானின் இரகசியப் பத்திரங்கள் அடங்கிய சூட்கேஸ் பூட்டப்பட்ட நிலையில் கையளிக்கப்பட்டது.

குறிப்பிட்ட அதிகாரி கற்பிட்டியை அடைந்ததும், பரிசோதனைக்காக வந்த படையினர் குறிப்பிட்ட சூட்கேஸை திறந்து காட்டும்படி கோரியுள்ளனர். இரகசிய இலக்கங்களால் பூட்டப்பட்ட சூட்கேஸைத் திறக்க முடியாத அந்த அதிகாரி சூட்கேசுடன் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து கற்பிட்டிப் பொலிஸார் மன்னார் பொலிசாருடன் தொடர்பு கொண்டதைத் அடுத்து மன்னார் பொலிசாரின் அறிவுறுத்தலுக்கமைய அவர் விடுதலை செய்யப்பட்டார்.

## கரவெட்டி பிரதேச செயலர் கைதாகி விடுதலை

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேச செயலர் திரு. எஸ். ஸ்ரீனிவாசன் கொழும்பில் வைதது பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சுமார் பத்து மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பரீட்சை ஒன்றுக்காக சென்றிருந்த இவர் உறவினர் வீட்டில் படுத்திருந்த வேளையில் அதிகாலை 3.30 மணிக்கு வீட்டை முற்றுகையிட்ட பொலிசார் இவரைக் கைது செய்து சென்றனர்.

பல மணிநேரம் விசாரணை செய்யப்பட்ட பின்னர் மறுநாள் வரும்படி பணிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். கல்கிசை பொலிசாரே இவரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினர். (யோ)

## பரவிக்குளம் பகுதியில் புலிகள்-இராணுவம்மோதல்

## வீரச்சாவு



வீரவேங்கை கங்கா

## ஐ.ஐ.தே. முன்னணியுடன் சமரசம் செய்ய டி.பி. முயற்சி

(கொழும்பு)

ஐ.தே.கவுடன் அதிருப்தியுற்று வெளியேறியவர்களால் உருவாக்கப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் ஒற்றுமை காணபேச்சு நடத்த ஐ தே.க மத்தியகுழு ஜனாதிபதி விஜேதுங்கவுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

இதன் மூலம் ஐ தே.கவுடன் காமினி திஸ்ஸ நாயக்கா தலைமையிலான ஜ.ஐ. ... பதி விஜேதுங்கவுடன் அண்மையில் பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

எனினும் தமது கட்சி ஐ.தே கவுடன் என்றும் இணைய மாட்டாது என காமினி திஸ்ஸநாயக்க கூறி வந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

லலித் அத்துலத் முதலி படுகொலையால் தலைமைத்துவ இழப்பும், ஜனாதிபதி பிரேம ... முன்னணி ஐ.தே.க. வுடன் இணைய முடிவு செய்தமைக்கு காரணம் என பி.பி.ஸி தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## வெளிவாரி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் முன்பு அறிவித்த திகதியில் இருந்து பின்போடப்பட்டுள்ளது. அதன்படி வணிகமுதற்தேர்வு கலைமுதற்தேர்வு ஆகியன ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும், வணிகம் பகுதி I, கலை பகுதி தேர்வு செப்டெம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்றும் யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பிரிவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (88)

## ராஜீவ் கொலை வழக்கு வழக்கறிஞருக்கு மிரட்டல்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் வாதிடும் வழக்கறிஞர் துரைசுவாமிக்கு ... கள் கொலையில் சம்பந்தப்பட்டவர்களே அவர்களை காப்பாற்ற வாதிட்டால் கொலை செய்யப்படுவாய் என

சூட்கேஸ் பூட்டப்பட்ட நிலையில் கையளிக்கப்பட்டது.

குறிப்பிட்ட அதிகாரி கற்பிட்டியை அடைந்ததும், பரிகொண்டதைத் அடுத்து மன்னார் பொலிசாரின் அறிவுறுத்தலுக்கமைய அவர் விடுதலை செய்யப்பட்டார்.

வார்த்தைகளில் சர்வதேச

ஆசிரியர் சங்கத்தின் அறிக்

போன்றதே இதுவும்என அவர்

மேலும் தெரிவித்தார்.

## கரவெட்டி பிரதேச செயலர் கைதாகி விடுதலை

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேச செயலர் திரு. எஸ். ஸ்ரீனிவாசன் கொழும்பில் வைத்து பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சுமார் பத்து மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பரீட்சை ஒன்றுக்காக சென்றிருந்த இவர் உறவினர் வீட்டில் படுத்திருந்த வேளையில் அதிகாலை 3.30 மணிக்கு வீட்டை முற்றுகையிட்ட பொலிசார் இவரைக் கைது செய்து சென்றனர்.

பல மணிநேரம் விசாரணை செய்யப்பட்ட பின்னர் மறுநாள் வரும்படி பணிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். கல்கிசை பொலிசாரே இவரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினர். (யோ)

## பரவிக்குளம் பகுதியில் புலிகள் - இராணுவம்மோதல்

[கொழும்பு]

மட்டக்களப்பில் பரவிக்குளத்தில் சிறிலங்கா பாதுகாப்பு படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் நடைபெற்றதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

மட்டக்களப்பு பரவிக்குளத்தில் விடுதலைப் புலிகளின் முகாமை சுற்றிவளைக்க முயன்றபோது மேற்படி மோதல் நடைபெற்றதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பு வடக்கில் சுமணை-2 படை நடவடிக்கை

மட்டக்களப்பு வடக்கில் சுமண-2 எனும் இராணுவ நடவடிக்கை இராணுவத்தால் மேற்கொள்ளபபடுகிறது. கடந்த மாதம் 30ஆம் திகதி ஆரம்பமான இந்த நடவடிக்கை எலுமிச்சையான் குடா பகுதிவழியாக நடத்தப் படுகிறது.

கடந்த மாதம் மட்டு. வடக்கில்முகுது சுலங் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே.

இதேசமயம் வவுனியா, மணலாறு, மட்டக்களப்பு பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனா.

## இயக்கச்சி இராணுவம்மீது புலிகள் எறிகணைத்தாக்கு

இயக்கச்சிப்பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மீது கடந்த ஐந்தாம் திகதியன்று விடுதலைபபுலிகள் எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டனர்.

அப்பகுதியில் உள்ள முகாமொன்றில் வேலை செய்து கொண்டிருந்த இராணுவத்தினர்மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது

விடுதலைப்புலிகளின் இத்தாக்குதலால் சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

## கடற்படை தாக்குதல் மீனவர் காயம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் நேற்று மீனவர்கள் பலமாகத் தாக்கப்பட்டனர்.

நேற்றுக் காலை ரோந்து சென்ற கடற்படையினர் பொலிகண்டி, சற்கோட்டை முனைப் பகுதிகளில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி சினைப்பர் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடலில்குதித்து தப்பியோட முயன்ற மீனவர்களை வழிமறித்துப் பிடித்து தமது விசைப்படகில் ஏற்றிவைத்து பலமாகத் தாக்கியதில் மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து சற்கோட்டையில் தங்கிவரும் வீ. ஆனந்தன் என்பவர் காயமடைந்தார்.

மேலும் படகுகள் மீது மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டின் போது சில படகுகள் சேதமடைந்ததாகவும் சொல்லப்படுகிறது. (யோ)

## வீரச்சாவு



வீரவேங்கை கங்கா (வளவின்)

04-07-1993 அன்று மாலை 4.05மணியளவில் திருக்கோணமலை சிற்றாறு எனும் இடத்தில் விடுதலைப் புலிகள் போராளிகள் சென்று கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கை கங்கா / வளவின் (நாகராஜா ஜெயக்குமார். 4ஆம் வட்டாரம் கட்டைபறிச்சான் மூதூர்) எனும் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# ஐ.ஐ.தே. முன்னணியுடன் சமரசம் செய்ய டி.பி. முயற்சி

(கொழும்பு)

ஐ.தே.கவுடன் அதிருப்தியுற்று வெளியேறியவர்களால் உருவாக்கப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் ஒற்றுமை காணபேச்சு நடத்த ஐ தே.க மத்தியகுழு ஜனாதிபதி விஜேதுங்கவுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

இதன் மூலம் ஐ தே.கவுடன் காமினி திஸ்ஸ நாயக்கா தலைமையிலான ஜ ஐ. தே.மு. இணையக் கூடிய வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. முன்னதாக காமினி, ஜனாதிபதி விஜேதுங்கவுடன் அண்மையில் பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

எனினும் தமது கட்சி ஐ.தே கவுடன் என்றும் இணைய மாட்டாது என காமினி திஸ்ஸநாயக்க கூறி வந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

லலித் அத்துலத் முதலி படுகொலையால் தலைமைத்துவ இழப்பும், ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையால் கட்சியின் ஐ தே.க. எதிர்ப்பு பிரசாரம் மழுங்கடிக்கப்பட்டமையுமே ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி ஐ.தே க. வுடன் இணைய முடிவு செய்தமைக்கு காரணம் என பி.பி.ஸி தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர் நியமனம் வழக்கு விசாரணை ஆரம்பம்

தென்மாகாண முதலமைச்சர் எம். எச். அமரசிறி வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜெய விக்ரம பெரேரா ஆகியோர் முதலமைச்சர்களாக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து தொடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவர்கள் முதலமைச்சர்களாக முறைகேடான முறையில் அண்மைய மாகாணசபை தேர்தலை தொடர்ந்து நியமிக்கப்பட்டதாக எதிர்க்கட்சிகள் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தமை தெரிந்ததே. பிரதிவாதிகளின் சார்பில் வாதிடும் வழக்கறிஞர் நேற்று தனது தொகுப்புரையை நிகழ்த்தினார்.

...அறிவித்த திகதியில் இருந்து பின்போடப்பட்டுள்ளது. அதன்படி வணிகமுதற்தேர்வு கலைமுதற்தேர்வு ஆகியன ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும், வணிகம் பகுதி I, கலைபகுதி தேர்வு செப்டெம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்றும் யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பிரிவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (88)

## ராஜீவ் கொலை வழக்கு வழக்கறிஞருக்கு மிரட்டல்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் வாதிடும் வழக்கறிஞர் துரைசுவாமிக்கு மிரட்டல் கடிதம் ஒன்று கிடைத்துள்ளதாம். இதை அவரே நேற்று நீதிமன்றத்தில் வெளியிட்டார். ஜூன் 26ஆம் திகதியிடப்பட்ட இந்த கையெழுத்திடப்படாத கடிதத்தில் எதிரிகள் கொலையில் சம்பந்தப்பட்டவர்களே அவர்களை காப்பாற்ற வாதிட்டால் கொலை செய்யப்படுவாய் என வழக்கறிஞரை மிரட்டியிருந்தது.

அவரது வீட்டிற்கும் தொலைபேசி மிரட்டல்கள் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## காலபோக செய்கைக்கு மண்ணெய் ஒதுக்க முடிவு

யாழ். குடாநாட்டில் காலபோக பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு தேவையான சுமார் 750 பரல் மண்ணெண்ணையை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம் முடிவு நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற விவசாய குழுக் கூட்டத்திலேயே எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ். குடாநாட்டிற்கு சிறிலங்கா அரசினால் ஒரு மாதத் தேவைக்கென அனுமதிக்கப்பட்ட 5000 பரல் மண்ணெண்ணெய் முற்று முழுதாக அனுப்பிவைக்கப்படாமல் இருந்த போதிலும் தற்போது வந்து சேரும் தொகையில் இருந்துமேற்படி மண்ணெண்ணெய் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கூட்டத்தில் இதுவரை காலமும் கூட்டுறவுத்துறை மற்றும் திணைக்களங்களினால் கொள்வனவு செய்து விநியோகிக்கப்பட்ட உரவகைகளை தனியாரும் கொள்வனவு செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக முயற்சியை மேற்கொள்ள விரும்பும் தனியார் துறையினர் யாழ். செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளபபடுகின்றனர். (பா)

# காரியம் நிறைவேறாமல் வீடு திரும்புகிறோம்

## கைதியின் உறவினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"நாம் எதிர்பார்த்து வந்த காரியம் நிறைவேறாமலேயே வீடு நோக்கி செல்கிறோம். எமது உறவினரைப் பார்க்க மகிழ்ச்சியுடன் வந்தோம். ஆனால் இன்று தாங்கமுடியாத வேதனையுடன்செல்கிறோம்" என நேற்று கொழும்பு திரும்பிய, புலிகளால் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர் பி. விஜேரட்ண தெரிவித்தார்.

"எமது பிள்ளைகள் புலிகளின் பாதுகாப்பில் மிகவும் நல்லமுறையில் இருப்பார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் செல்கிறோம். எம்மைத் திருப்திப்படுத்த எமது அரசாங்கம் தவறிவிட்டது. ஆனால் எம்மை மிக நன்றாக உபசரித்து பல சிக்கல்கள் மத்தியில் காப்பாற்றியதற்கு விடுதலைப்புலிகளுக்கு நன்றி தெரிவிக்கின்றோம.

"அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்பட எமக்குச் சக்தியில்லை. அதனை மீறி நாம் செயற்பட்டால் எமது குடும்பங்களை அவர்களிடமிருந்து காப்பாற்ற முடியாது. எமக்கு கண்ணீர் சிந்துவதைத் தவிர வேறுவழியில்லை. எமது பிரச்சினையை அழுத்திக் கூற எதிர்க்கட்சிகளுக்குக் கூட விருப்பமில்லை.

"நாம் உழைத்தே இன்று எமது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். எனவே அவர்களின் நிலையைக் கருத்தில் கொண்டே செல்கிறேன். என்னால் இயன்றவரை அரசியல் வாதிகளுடனும் அதிகாரிகளுடாகவும் முயற்சிப்பேன்" என்று தெரிவித்தார்.

## கைதிகளின் நான்கு உறவினர் நேற்று கொழும்பு திரும்பினர்

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகளின் உறவினர் நால்வர் நேற்று கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றனர். நேற்று பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து வாதுவ கப்பல் மூலம் புறப்பட்டுச் சென்ற இவர்கள் இன்று கொழும்பு செல்வர் என தெரியவருகிறது.

சென்ற மாதம் 18ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த இவர்கள் தமது குடும்பங்களின்நிலைமை காரணமாகவே திரும்பிச் செல்ல வேண்டி ஏற்பட்டதாக தெரிவித்தனர்,

## வன்னிப்பிராந்தியத்தில் கரும்புலிகள் நினைவுநாள்

(நமதுநிருபர்)

கரும்புலிகளின் விடுதலை உணர்வைப் போற்றும் வகையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட மாபெரும் ஊர்வலம் கரும்புலிகள் நாளான கடந்த 5-ம் திகதி வன்னிப் பிராந்தியத்தில் நடைபெற்றது

மாலை 5. 30 மணியளவில் கனகராஜன் குளத்திலிருந்து பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்தியத்துடன் ஊர்வலம் ஆரம்பமானது. இவ் ஊர்வலத்தை வவுனியா கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சிபி ஆரம்பித்து வைத்தார். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்ட இவ் ஊர்வலத்தில் விடுதலைப் புலிகளின் அணிவகுப்பும் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பும் இடம்பெற்றது. இதில் கரும்புலிகளின் உணர்வுகளை காட்டும் முகமாக பல சுலோகங்களையும் தாங்கியவாறு மக்கள் கலந்துகொண்டனர்.

கரும்புலிகளின் கல்லறையின் மாதிரியைக்கொண்ட ஊர்தி ஒன்றும் ஊர்வலத்திற்கிடையில் மெல்லப்பவனி வந்தது. சுமார் அரைமைல் நீளம்வரை நடைபெற்ற ஊர்வலம் இறுதியாக கனகராயன்குள விளையாட்டுமைதானத்தை வந்தடைந்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முட்டையிடும் வெள்ளைநிற பாம் கோழிகளும், நல்ல இன பால் கறக்கும் மாடுகளும் விற்பனைக்குண்டு தொடர்பு: பண்ணை இருபாலைகிழக்கு, அரசடி றோட் இருபாலை. (5292)

---

மூன்று பரப்பு புதிய மேல் மாடி வீடு ஆஸ்பத்திரி, அலுவலகங்களுக்கும் இரு குடும்பங்கள் இணைந்து வாழ்வதற்கு ஏற்றதுமான பத்து அறைகள். அகன்ற முற்றங்கள், தனிக் கிணறு, சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு பொ. காங்கேயன், சட்டத்தரணி மருத்துவக் கல்லூரி எதிர், திருநெல்வேலி. (5299)

### வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், லேஸ், நூல் வகைகள், எவர் சில்வர் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருள்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள -ஜெயா அழகுசாதன மாளிகை, 177 -A, மின்சார வீதி, யாழ்ப்பாணம். (சி/6968)

### தேவை

யாழ் நகர், நகரை அண்மித்த பகுதிக்குள் அலுவலக தேவைக்கு வீடு அல்லது கடைபோன்ற இடம் தேவை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோ பிரபாகரன், நியூ சென்றல் பேக்கரி, 69, மவுண்கார்மல் வீதி யாழ்ப்பாணம். [5302]

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஒட்டோமற்றிக், வைன்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். விற்கப்படும். டில்காவாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (சி-6931)

### வருடாந்த மெய்வல்லுநர்போட்டி

வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் யாழ் புனித மரியாள் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன. இப்

---

# A/L 94

| | | |
|---|---|---|
| கணக்கியல் | – | திரு. V உருத்திரசிங்கம் |
| பொருளியல் | – | திரு சண் |
| வர்த்தகம் | – | திரு சுகுணன் |
| அளவையியல் | – | திரு. யுகபாலசிங்கம் |

ஆரம்பம்:

**08-07-1993 மாலை 3 மணி**

**பட்டப்படிப்புகள் கல்லூரி,**

57/48, ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்.


**AL/95 புதிய பிரிவு**

ஆரம்பம்: **11.7.93 பி.ப.3 மணி**

(சி-6958)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## வி. ஏகாம்பரமூர்த்தி

(அதிபர் யா / தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாசாலை)

தோற்றம்: 25-04-1944 மறைவு: 01-07 1991

திதி: 08-07 1993

திருமுறைகள் புராணங்கள் இதிகாசங்கள்
தியானத்தில் தினம்நினைந்து சிவனின் பாதம்
தருகருணைத் தேனுண்டு மனம்வாய் காயம்
தவநெறியின் வழிசெலுத்தி மாணவர்க்குக்
குருவாகிக் கலையிறறி அறிஞர் போற்றும்
குலமணியாய்த் திகழ்ந்தவனே எமது நெஞ்சின்
அருள்மணியே ஏகாம்பர மூர்த்தி அப்பா
அரனடிக்கீழ் நீ மகிழ்ந்துவாழிவாழி.

---

சித்தன்கேணி – பெரியவளவு

ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் தேவஸ்தான

## வருடாந்த (1008) மகா சங்காபிஷேகம்

08-07-93 வியாழக்கிழமை இன்று

தேவஸ்தான தவில் வித்துவான்

சு. தில்லைநாதன் அவர்களுக்கு

இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் இவருடைய சேவையைப் பாராட்டி, பொன்னாடை போர்த்தி தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கிறார்கள். இசைப் பிரியர்களை அணிதிரளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

★ நன்றி ★

தகவல்

வே. பரந்தாமன்
தலைவர்

[5304]

---

வலி வடக்கு ஓய்வூதியர் சங்க

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம் 1993.07.11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப 9 00 மணிக்கு

இடம்: மல்லாகம் மகா வித்தியாலயம்

திரு. வை. பொன்னையா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

**முதன்மை விருந்தினர்:**

முன்னாள் வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர்
திரு. கே சந்திரராசா அவர்களும்

**சிறப்பு விருந்தினர்கள்:**

வடபிராந்திய ஓய்வூதியர் சம்மேளனத் தலைவர்
திரு. சீ. வீ. கே. சிவஞானம் அவர்களும்

கௌரவ செயலாளர்
திரு. பி. எஸ் திருச்செல்வம் அவர்களும்
கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

சகல அங்கத்தவர்களையும் மற்றும் அங்கத்துவம் பெற விரும்பும் வலி வடக்கு ஓய்வூதியர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்,

அன்றைய தினம் 1993-ம் ஆண்டிற்கான, அதற்கு முந்திய நிலுவையான அங்கத்துவப் பணமும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(5300)

---

## 2ஆம் ஆண்டில் நினைவு கூருகின்றோம்

பிறப்பு: 1973-10 15 வீரச்சாவு: 1991-07 10

## 2-ம் லெப். அமராவதி

---

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தின் கைத்தொழில் மேம்பாட்டிற்காக மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளை ஒன்றிணைக்கும் முகமாக "தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம்" உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே தற்பொழுது முழுமையாக இயங்கிக் கொண்டிருக்கும் கைத்தொழில் நிறுவனங்கள், தொடர்ச்சியாக இயங்கி தற்கால சூழ்நிலையால் இயங்காதிருக்கும் கைத்தொழில் நிறுவனங்கள் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் கைத்தொழில் நிறுவனங்கள் யாவும் தம்மை இந்நிறுவனத்தில் தவறாது பதிவு செய்யும்படி வேண்டப்படுகின்றனர்.

மேலதிக விபரங்கட்கு இல. 230, இராமநாதன் வீதி (பல்கலைக்கழகத்திற்கு முன்பாக) யில் அமைந்துள்ள தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

**தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம்**

[சி/6970]

---

## நீங்காத நினைவுடன் 2-ம்ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 08. 07. 1970

தாயக மீட்பில்: 16. 07. 1991

திதி: 08. 07. 1993



# மேஜர் ஜாசீர்

(கந்தசாமி சிவதாஸ்)

வேங்கைகளின் படையணியில்
வீறு கொண்ட புலியாக
அடிபாடு என்று சொன்னால்
அவ்விடத்தில் நீ நிற்பாய்
உன் துப்பாக்கி முடுக்கிவிட்ட
ஓசை இன்னும் கேட்குதிங்கே
நீ விட்ட பணி தொடர
உன் ஆயுதமும் முழங்குதிங்கு.

உசன் தெற்கு,
மிருசுவில்.

கந்தசாமி
குடும்பத்தினர்

(5288)

---

## நினைவு கூருகின்றோம் ... 1993-07-08

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-
பிரி (சீவரத்தினம் கிருஷ்ணராஸ் - 30 எக்கர்-

## உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமற்றிக், வைன்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். விற்கப்படும். டில்காவாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (சி-6931)

### வருடாந்த மெய்வல்லுநர்போட்டி

வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் யாழ் புனித மரியாள் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன. இப்போட்டியில் பாரதி இல்லம் முதலிடத்தையும், வள்ளுவன் இல்லம் இரண்டாமிடத்தையும், கம்பன் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.


### தலைமைத்துவ பயிற்சி நெறி

யாழ். பல்கலைக் கழகப் புறநிலைப் படிப்புகள் அலகினால் தலைமைத்துவப் பயிற்சி நெறி, சனசமூக நிலையங்களின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளது இதில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள், தாம் அங்கம் வகிக்கும் சனசமூக நிலையச் செயலாளரினூடாகச் சுய விபரங்களடங்கிய விண்ணப்பங்களை யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு 93 07 15க்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ஒவ்வோர் வார இறுதி நாள்களில் நடை பெறவுள்ள இப்பயிற்சி நெறிக்கான அனுமதிக்கட்டணம் ரூ.100/-ஆகும் பயிற்சி முடிவில், பங்குபற்றியமைக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

### சின்னம் சூட்டும் விழா

நாவற்குழியில் இயங்கிவரும் தம்பாட்டி அ. த. க. பாடசாலையின் சாரணர் சின்னம் சூட்டும் வைபவம் உதவி மாவட்ட ஆணையாளரும், சாரணர் குழுத் தலைவருமாகிய திரு. க. குமரேஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக வேலணை கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு பொ. சிவகுருநாதன், சாரணர் யாழ். மாவட்ட ஆணையாளர் திரு. இ. மகேந்திரன். ஊர்காவற்றுறை கொத்தணி அதிபர் திரு. ஏ. ந. இரத்தினராசா ஆகியோர் கலந்து கொண்டார்கள். (17)



அமரர்

## வி. ஏகாம்பரமூர்த்தி

(அதிபர் யா/ தொல்புரம் விகனேஸ்வர வித்தியாசாலை)

தோற்றம்: 25-04-1944 மறைவு: 01-07 1991

திதி: 08-07 1993

திருமுறைகள் புராணங்கள் இதிகா சங்கள்
தியானததில் தினம்நினைந்து சிவனின் பாதம்
தருகருணைத் தேனுண்டு மனம்வாய் காயம்
தவநெறியின் வழிசெலுத்தி மாண வர்க்குக்
குருவாகிக் கலையயிறறி அறிஞர் போற்றும்
குலமணியாய்த் திகழ்ந்தவனே எமது நெஞ்சின்
அருள்மணியே ஏகாமபர மூர்த்தி அப்பா
அரனடிககீழ் நீ மகிழ்ந்துவாழிவாழி.

"இன்பலனை"
மூளாய்,
சுழிபுரம். (5270)

மனைவி, தகப்பனார், மாமனார், சகலன்மார், மைத்துனிமார், மக்கள்.

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி




## வீரவேங்கை வசந்தன்

(காசிப்பிள்ளை உதயகுமார்)

பிறப்பு 29-01-1967 வீரச்சாவு 08-07-1987

(08-07-1993)

எம் இனிய உதயனே
இன்று நீ தமிழ்மண்ணினுள்
உனது முகவரி மாவீரர் துயிலும் இல்லத்தில்
நீ பிறந்தது கோவை மண்ணினுள்
உன் பெயர் சொல்லும் வீதி
நீ ஏந்திய ஆயுதம்
உன் தம்பியின் கரங்களில்
சாவு உன் சரித்திரத்துடன்
இணைந்து இன்று ஆறாண்டுகள் - ஆனாலும்
அடங்காது உன் இலட்சியம்
எழுந்து விடு மீண்டும்
தொடர்ந்து விடு விடுதலைப் பாதையை.

உன் உதயத்திற்காய் ஏங்கும்,

வசந்தன் வீதி,
கோப்பாய். (5274)

அம்மா, தம்பி, தங்கைகள், மச்சான்.

கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

சகல அங்கத்தவர்களையும் மற்றும் அங்கத்துவம் பெற விரும்பும் வடமராட்சி ஓய்வூதியர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்,

அன்றைய தினம் 1993-ம் ஆண்டிற்கான, அதற்கு முந்திய நிலுவையான அங்கத்துவப் பணமும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(5300)

## 2ஆம் ஆண்டில் நினைவு கூருகின்றோம்

பிறப்பு: 1973-10 15 வீரச்சாவு: 1991-07 10

## 2-ம் லெப். அமராவதி

(பாலசிங்கம் நளா)

(2ஆம் வட்டாரம், குச்சவெளி, திருக்கோணமலை)

திதி: 08-07-93

உன் சாவு
இங்கு சரித்திரம்!
உன் குருதியில்
எமது தாயகம்
பிறப்பெடுக்கப் போகிறது!

1025, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (5305)

தாய் சகோதரிகள்.

## வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்

(மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது)

### அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1-ம் பரிசு இல. 2973
2-ம் பரிசு இல. 118
3-ம் பரிசு இல. 1224

10 ஆறுதற் பரிசு இலக்கங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | 1257 | 6. | 4829 |
| 2. | 730 | 7. | 12 8 |
| 3. | 966 | 8. | 169 |
| 4. | 4758 | 9. | 513 |
| 5. | 4599 | 10. | 2411 |

★ பரிசுக்குரியவர்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளப்படும்.

★ சீட்டிழுப்பு தொடர்பாக ஆதரவளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

### சுருக்கெழுத்து தட்டச்சுக் கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், அல்வாய் ஆகிய இடங்களில நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் இத்துறைசார்ந்தஆசிரியர்கள் மாணவர்கள்தொழில்புரிவோர் கடிதமூலம் 19-7-93ற்கு முன் பதிவு செய்துகொள்ளவும்.

-செயலாளர்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
வதிரி, கரவெட்டி,
06-07-1993 (5306)

வேங்கைகளின் படையணியில்
வீறு கொண்ட புலியாக
அடிபாடு என்று சொன்னால்
அவ்விடத்தில் நீ நிற்பாய்
உன் துப்பாக்கி முடுக்கி விட்ட
ஓசை இன்னும் கேட்குதிங்கே
நீ விட்ட பணி தொடர
உன் ஆயுதமும் முழங்குதிங்கு.

உசன் தெற்கு,
மிருசுவில்.

கந்தசாமி குடும்பத்தினர்

(5288)

## நினைவு கூருகின்றோம்... 1993-07-08

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ **சிறி** (சிவரத்தினம் கிருஷ்ணதாஸ் - 30 ஏக்கர்-திருமலை)

தொண்டமானாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**வசந்தன்** (காசிப்பிள்ளை உதயகுமார் - நாவற்கட்டை, கோப்பாய் - யாழ்)

பெலவத்தை சிறிலங்கா இராணுவ தடுப்பு முகாமில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவன் உட்பட 02 தமிழர்கள்.

மன்னார் - அடம்பன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கர்ப்பிணிப் பெண், கணவர், 7 வயது மகன், மூதாட்டி ஆகிய 04 தமிழர்கள்.

யாழ் - கரவெட்டியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1988ஆம் ஆண்டு கிளிநொச்சி - பரந்தன் - நவஜீவனம் அருகில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989ஆம் ஆண்டு யாழ் - நல்லூர்ப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப் நிக்சன்** (ஞானப்பிரகாசம் நிஷாந்தன் - சுண்டுக்குளி - யாழ்)

**அன்பு** (அம்பிகைபாலன் அன்பழகன் - 22 அன்பழகன்வீதி, நாயன்மார்கட்டு - யாழ்)

1990ஆம் ஆண்டு மட்டுநகரில் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 08 தமிழர்கள்.

திருமலையில் வேலைக்குச் சென்று காணாமல்போன புன்னைச்சோலை காளிகோயில் வீதியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

திருமலை - கட்டைபறிச்சான் - தோப்பூர், பள்ளிக்குடியிருப்புக் காடுகளில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட பல தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டு - கரடியனாறுப் பகுதியில் ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு தமிழர்.

கொழும்பிலிருந்து அத்தியாவசியப் பொருள்களுடன் யாழ் நோக்கி வந்து கொண்டிருந்த வேலணை ப. நோ. கூ. சங்க லொறி மீது சிறிலங்கா இராணுவத்தினரால் ஏவப்பட்ட எறிகணை வீச்சில் பலியான சாரதி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6969)

## சிந்தனைக்கு

காலத்தின் பற்கள் மற்ற அனைத்தையும் கொரிக்கலாம். ஆனால், வாய்மையைக்கொரிக்க அதற்கு வலிமை கிடையாது.

- தாமஸ் எச். ஹக்ஸ்லி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# பேரினவாதத்தின் புதிய ஏஜெண்டுகள்

**பு**லிகள் ஏமாற்றி விட்டார்கள். புதிய நிபந்தனைகளை விதித்து ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு விட்டார்கள் எனக் கூறிக் கொண்டிருந்தவர்கள் தற்பொழுது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தவறிழைத்து விட்டது; அதன் நம்பகத் தன்மை கேள்விக்குரியதாகி விட்டது எனக் கூக்குரல் இடத் தொடங்கியுள்ளனர். சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகள் இடும் இக் கூக்குரலுடன் மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் குழு எனத்தம்மைக் கூறிக் கொள்ளும் யாழ். பல்கலைக்கழகத்தில் பதவி ஏதும் வகிக்காத ஒரு சிலரைக் கொண்ட குழு ஒன்றும் சேர்ந்து கொண்டுள்ளது.

''சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நம்பகத்தன்மை சந்தேகத்திற்குரியதாகியுள்ளது. இக் குழுவில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனர். இதனால் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவை வேறு கோணத்தில் நாம் பார்க்க வேண்டியுள்ளது. சிறிலங்கா நெருக்கடி சம்பந்தமான பேச்சுவார்த்தையில் சர்வதேச செஞ்சிலுவைக் குழு ஒரு நேர்மையான தரகராக நடந்து கொள்ளும் என்ற உள்ளூர், சர்வதேச மட்டத்து எதிர்பார்ப்புக்கள் நம்பிக்கையற்றனவாகி விட்டன.'' இதுவே யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் குழு எனக் கூறிக்கொள்ளும் குழு பேரினவாதிகளுக்காக வாசித்த குற்றப் பத்திரிகை ஆகும்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நம்பகத் தன்மை, நேர்மை என்பனவெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். தங்களை மனித உரிமைகளுக்கான குழுவென்றும், யாழ். பல்கலைக்கழக குழுவென்றும் கூறிக் கொள்ளும் இக்குழுவின் நம்பகத் தன்மையும், நேர்மையும் எந்தளவு என்பதும் முக்கியமானது. மற்றவர்கள் மீது குற்றம் சுமத்த இம்மோசடி அமைப்பிற்கு என்ன அருகதை உண்டு?

மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக் கழக குழு என்ற ஒரு குழு எமது பல்கலைக்கழகத்தில் இல்லை என யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பல மாதங்களுக்கு முன் திட்டவட்டமாக அறிவித்துள்ள போதும் தம்மை யாழ். பல்கலைக்கழகக் குழு எனக் கூறிக் கொள்ளும் இக்குழுவின் நேர்மையும், நம்பிக்கைத் தன்மையும் எந்தளவு? தற்பொழுது யாழ். பல்கலைக்கழக

# கொழும்பில் தமிழர் கைது; தொண்டா-டி. பி. சந்திப்பு

[கொழும்பு]

தமிழர் கொழும்பில் துன்புறுத்தப்படுவது தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் அண்மையில் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவைச் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. தமிழர் கைது செய்யப்படுவது சம்பந்தமாகப் பல அமைப்புகள் புகார் தெரிவித்ததின் பயனாக ஓர் இணக்கம் ஏற்பட்ட பிறகும், மலையகத் தமிழர் கொழும்பில் தொடர்ந்தும் கைது செய்யப்படுவதாக அமைச்சர் எஸ். தொண்டமான் கூறினார்.

கொழும்பில் தமது அன்றாட வேலைகளைக் கவனிக்கும் தமிழர்களும், தொழில் துறைகளில் உள்ளவர்களும் துன்புறுத்தப்படுவதைத் தவிர்க்கும் வகையில் தொண்டமான் தெரிவித்த ஆலோசனைகளை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பின்வரும் முடிவுகளைச் செயற்படுத்துவதாகவும் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

★ ஒருவர் சந்தேகத்துக்குரியவர் என்று பாதுகாப்பு அமைப்பு ஒன்று அறிக்கை சமர்ப்பிக்காமல் அவர் தமிழரென்பதற்காக அவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யக் கூடாது.

★ கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஏனைய குற்றவாளிகளுடன் சிறை வைக்கக் கூடாது. அவரைக் கௌரவமாக நடத்துவதுடன் அறைக்கு வெளியில் நடமாட அனுமதித்தல்.

★ கைது செய்யப்படும் போது, அவர் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்துவாராயின் அவரைக் கைது செய்வதைத் தவிர்த்தல். தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு, வதிவிடத்தைப் பொலிசில் பதிவு செய்த படிவத்தின் பிரதி, வாக்காளர் பட்டியலில் பெயர் குடும்பத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், குடியிருப்பாளர் என்பதை உறுதிப்படுத்தும் வீட்டுச் சொந்தக்காரரின் கடிதம், கிராம அபிவிருத்தி நிலையத்தின் கடிதங்கள் ஆகியன வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

★ ஒருவர் கொழும்பில் தொழில் பார்ப்பவராக இருந்தால்;

அ) தொழில் கொள்வோரின் உறுதிக் கடிதம்.

ஆ) நிறுவனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.

★ பெண்களை இரவில் கைது செய்யக்கூடாது. பெண்களை இரவில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கக் கூடாது.

மேற் குறிப்பிட்ட விதிகளுக்கு மாறாக எவரும் கைது செய்யப்பட்டால், அவர் பாதுகாப்புப்படைகளால் தேடப்படாதவராயிருந்தால் 24 மணி நேரத்துக்குள் அவரை விடுதலை செய்ய வேண்டும்.

இந்த விதிமுறைகள் உடனடியாகப் பொலிஸ், இராணுவம் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இச் சந்திப்பின்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் உடனிருந்தார்.

# தோட்டத் தொழிலாளரை விட படையினர்வசதி குறைவாம்

## சு.க. எம்.பியின் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

யுத்தம் நடைபெறும் பகுதியில் உள்ள படையினருக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு உள்ள வசதிகளை விட மோசமானது என சுதந்திரக் கட்சி எம். பியான எஸ்.எல். குணசேகர தெரிவித்தார் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில்பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். வடக்கு கிழக்குபிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரு வழி என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விவாதத்தின் இறுதியில் பதிலளித்து பேசிய அமைச்சர் ஹரல்ட் ஹேரத், பாதுகாப்பு படையினருக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதில் அரசும் அக்கறையாக உள்ளது எனக் குறிப்பிட்டார். எமது அரசு யுத்தம் ஒன்றை எதிர் நோக்கிக் கொண்டு நிதிநெருக்கடியையும் சந்திக்கிறது முன்னைய அரசுகள் யுத்தநெருக்கடி இல்லாத போதிலும் நிதி நெருக்கடியை எதிர் கொள்ள வில்லையா? திறைசேரியின் பெருந்தொகைப் பணம் வடக்கு கிழக்கு போருக்கே செலவாகிறது என்றும் அமைச்சர் ஹேரத் மேலும் தெரிவித்தார்.

## காமினி-பிரேமச்சந்திர கருத்து முரண்பாடு

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயலாளர் பிரேமச்சந்திரா தெரிவித்த கருத்து கட்சியின் கருத்தல்ல என்றும், இது தனிப்பட்ட அவரின் கருத்து எனவும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசாநாயக்கா பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.

இதே வேளை தமது கட்சி அரசின் முன்னோடித்திட்டங்களுக்கு ஆதரவு நல்கும் என்றும் ஆனால் இதற்காக ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயல்படும் என கருத முடியாது என்றும் தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழக

## விஞ்ஞான பீடாதிபதியின்

## அரலித்துறை கண்ணிவெடி
## சர்வதேச விசாரணைக்குழு 79 லட்சம் செலவாகியது

(கொழும்பு)

அராலித்துறை கண்ணிவெடிச் சம்பவம் குறித்து சர்வதேச விசாரணைக் கமிஷன் மூன்று வாரம் நடத்திய விசாரணைக்காக அரசு 79லட்சம் ரூபாவை செலவிட்டுள்ளது.

இந்த விசாரணைக் குழுவின் மூன்று நீதிபதிகளுக்கும் கொழும்பு ஹில்டனில் தங்கியிருந்த செலவு, அவர்களின் முதல்வகுப்பு விமான டிக்கெட் செலவு, விசாரணை நடைபெற்ற பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டப வாடகை என்பனவற்றிற்கும் அரசு பணம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பிடியாணை உள்ள பலர் சுதந்திரமாக திரிகின்றனர்

### அமைச்சரவைப் பேச்சாளர்

(கொழும்பு)

நீதிமன்றினால் பிடிஆணை பிறப்பிக்கப்பட்ட பலர் சுதந்திரமாக உலாவுகின்றனர். பிரதி பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல சில காரணங்கள் நிமித்தமே சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு அமைச்சரவைப்பேச்சாளர் ஹரல்ட் ஹேரத் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

உடுகம்பொல சுதந்திரமாக நடமாடுவது குறித்து செய்தியாளர்கள் கேட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உடுகம்பொல இந்தியாவில் தங்கியிருக்க சிறிலங்கா வெளியுறவு அமைச்சு அனுமதித்தது என்ற கூற்றை முற்றாக மறுத்த அமைச்சர் ஹேரத், ஜனாதிபதியுடன் உடுகம்பொல பேச்சு நடத்தியமை குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்றும் கூறினார்.

### புதிய அதிபர் நியமனம்

நவாலி அரசடி மகாவித்தியாலயத்திற்கு புதிய அதிபர் திருமதி எஸ். விசுவலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் அதிபர் ஐ. மனோகரன் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இதேவேளை நவாலி அரசடி மகாவித்தியாலத்தில் இணை உப அதிபர்களாக திரு. சி. நாகையா, திரு. ஸ்ரீ யோகேஸ்வரன் ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

### கருத்தரங்கு

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை அரங்கில் எதிர்வரும் பத்தாம் திகதி சனிக்கிழமையன்று சித்த மருத்துவத்துறை வளர்ச்சி பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படி பதிவு செய்யப்பட்ட சகல சித்தமருத்துவ வைத்தியர்களையும், சித்த மருத்துவ பட்டதாரிகளையும், சித்த மருத்துவ அபிமானிகளையும், சித்த மருத்துவ மாணவர் மன்றம் அழைத்துள்ளது.

## மன்னார் மாவட்டத்தில் 5 புதிய பாடசாலைகள்

மன்னார் மாவட்டத்தில் புதிதாக ஐந்து பாடசாலைகளை ஆரம்பிக்க மன்னார் கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இரண்டு பாடசாலைகளும் கட்டுப்பாடற்ற பகுதிகளில் மூன்று பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படுமென கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத முள்ளிக்குளம், மாளிகைப்பிட்டி, பிள்ளையார் கட்டை, அடம்பன் ஆகிய பகுதியில் 3 பாடசாலைகள் அமையும்.

# பொருளாதாரத் தடை நீக்க பேரம் பேசுவது அநாகரிகம்

பேரினவாதிகளுக்காக வாசித்த குற்றப் பத்திரிகை ஆகும்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நம்பகத் தன்மை, நேர்மை என்பனவெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். தங்களை மனித உரிமைகளுக்கான குழுவென்றும், யாழ். பல்கலைக்கழக குழுவென்றும் கூறிக் கொள்ளும் இக்குழுவின் நம்பகத் தன்மையும், நேர்மையும் எந்தளவு என்பதும் முக்கியமானது. மற்றவர்கள் மீது குற்றம் சுமத்த இம்மோசடி அமைப்பிற்கு என்ன அருகதை உண்டு?

மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக குழு என்ற ஒரு குழு எமது பல்கலைக்கழகத்தில் இல்லை என யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பல மாதங்களுக்கு முன் திட்டவட்டமாக அறிவித்துள்ள போதும் தம்மை யாழ். பல்கலைக்கழகக் குழு எனக் கூறிக் கொள்ளும் இக்குழுவின் நேர்மையும், நம்பிக்கைத் தன்மையும் எந்தளவு? தற்பொழுது யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எவரும் அங்கம் வகிக்காத நிலையிலும் தம்மைப் பல்கலைக்கழகக் குழு எனக் கூறிக் கொள்ளும் இக்குழு உண்மை பற்றியும், நேர்மை பற்றியும் பேசுவது எந்தளவிற்குப் அருகதையுடையது?

மோசடித்தனமான, தாம் இல்லாத ஒரு நிறுவனத்தின் பெயரில் ஓர் அமைப்பை நடத்தும் இக்குழுவினர் தாம்புரியும் மோசடிகளை மறைக்க பல்கலைக்கழகத்திற்குள்ளும், 'புத்திஜீவிகள்' என்ற பெயருக்குள்ளும் மறைந்து கொள்ளப் பார்கின்றனர்? தமது கருத்துக்கள் உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக இவர்கள் கைக்கொள்ளும் வழிமுறைகள் முற்றிலுமாக ஒரு நிறுவனத்தின் பெயரால்செய்யப்படும் மோசடி ஆகும்.

மேலும் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தமைக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் எதுவித சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. பேச்சுவார்த்தை நடத்தியவர்கள் சிறிலங்கா அரசாங்கமும் - விடுதலைப் புலிகள் இயக்கமும் ஆகும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வைத்ததுடன் அவர்களின் கடமை முடிந்து விட்டது. சிலவேளை, கொழும்புடன் தொலைத் தொடர்பு அற்ற நிலையில், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் அரச தரப்பில் கலந்துகொண்டவர் தொடர்பு கொள்வதற்கு உதவியதாகத் தெரிகின்றது.

இந்நிலையில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே பேச்சுவார்த்தை முறிவிற்குக் காரணம் என குற்றம் சாட்டுவதில் அர்த்தம் எதுவுமில்லை. மேலும், உடன்பாட்டை நிறைவேற்றத் தவறியவர்கள் அரசாங்கத் தரப்பினரே. போர்க்கைதிகள் விடுதலைக்கு விடுதலைப் புலிகள் புதிய நிபந்தனை எதையும் விதிக்கவில்லை என அரச தரப்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட பிரிகேடியர் வீரசேகராவே தெரிவித்துள்ள நிலையில், புலிகள் உடன்பாட்டை முறித்துக் கொண்டார்கள் எனக் கூறுவதிலும் உண்மை இருப்பதாக இல்லை.

இந்நிலையில், வேறோர் அமைப்பின் பெயருக்குள் தன்னை மறைத்துக் கொண்டுள்ள ஒரு போலியான அமைப்பு மற்றையவர்களின் நேர்மை பற்றியும், நம்பிக்கைத் தன்மை பற்றியும் பேசுவது வேடிக்கையானது. இது கள்வன் ஒருவன் வழிப் போக்கனைப் பார்த்து அவன் திருடச் செல்கிறான் எனக் கூறுவது போன்றதாகும். பேரினவாதத்தின் போலியான இப் புதிய ஏஜென்டுகள் பற்றி உலகம் விழிப்பாக இருக்க வேண்டும்.

---

க்கு வெளியில் நடமாட அனுமதித்தல்.

கிழக்குபிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரு வழி என்றும்

## காமினி - பிரேமச்சந்திரா கருத்து முரண்பாடு

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயலாளர் பிரேமச்சந்திரா தெரிவித்த கருத்து கட்சியின் கருத்தல்ல என்றும், இது தனிப்பட்ட அவரின் கருத்து எனவும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசாநாயக்கா பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.

இதே வேளை தமது கட்சி அரசின் முன்னோடித்திட்டங்களுக்கு ஆதரவு நல்கும் என்றும் ஆனால் இதற்காக ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயல்படும் என கருத முடியாது என்றும் தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழக

## விஞ்ஞான பீடாதிபதியின் அறை சேதப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடப் பீடாதிபதியின் அலுவலக ஜன்னல்கள் மூன்று நொருக்கப் பட்டன. இது குறித்து விஞ்ஞான பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே.டி. அருட்பிரகாசம் உபவேந்தருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

மீளவும் வன்முறையையும், குழப்பத்தையும் ஏற்படுத்த ஒரு சிறு குழுவினரது செயல் இது என்று பேராசிரியரின் பத்திரிகைச் செய்திக் குறிப் பொன்று தெரிவிக்கின்றது.

## வட-கிழக்கு யுத்தம் குறித்து முதலீட்டாளர் கவலை

(கொழும்பு)

முதலீட்டாளர்கள் மற்றும் பொருளியலாளர்கள் வடக்கு, கிழக்கு பகுதியில் நிலவும் யுத்தம் தொடர்பாக கவலை தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இலங்கை அரசாங்கத்துடன் ஒரு வட்ட மேசை என்ற தலையங்கத்தின் கீழ் இடம்பெற்ற இரு நாள் கருத்தரங்கிலேயே அவர்கள் இக் கவலையை வெளியிட்டனர்.

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்றும் அவர்கள் அங்கு வலியுறுத்தியுள்ளனர்.

---

தார்.

## மன்னார் மாவட்டத்தில் 5 புதிய பாடசாலைகள்

மன்னார் மாவட்டத்தில் புதிதாக ஐந்து பாடசாலைகளை ஆரம்பிக்க மன்னார் கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இரண்டு பாடசாலைகளும் கட்டுப்பாடற்ற பகுதிகளில் மூன்று பாடசாலைகளும் ஆரம்பிக்கப் படுமென கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத முள்ளிக்குளம், மாளிகைப்பிட்டி, பிள்ளையார் கட்டை, அடம்பன் ஆகிய பகுதியில் 3 பாடசாலைகள் அமையும்.

மருத்துவத்துறை அரங்கில் எதிர்வரும் பத்தாம் திகதி சனிக்கிழமையன்று சித்த மருத்துவத்துறை வளர்ச்சி பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படி பதிவு செய்யப்பட்ட சகல சித்தமருத்துவ வைத்தியர்களையும், சித்த மருத்துவ பட்டதாரிகளையும், சித்த மருத்துவ அபிமானிகளையும், சித்த மருத்துவ மாணவர் மன்றம் அழைத்துள்ளது.

# பொருளாதாரத் தடை நீக்க பேரம் பேசுவது அநாகரிகம்

### நவசமசமாஜக் கட்சி

(கொழும்பு)

வடபகுதி மக்கள் கடந்த மூன்று வருடங்களாக மோசமான பசி, பட்டினி மற்றும் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். வடபகுதி மீது விதிக்கப்பட்டிருக்கும் அநாகரிகமான, மனிதாபிமான மற்ற பொருளாதாரத் தடையை நீக்க அரசு பேரம் பேசுவது ஒரு கேவலமான காரியமாகும் என நவசமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் போஷாக்கின்மை இருப்பதாகத் தெரியவில்லை என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா கூறியிருப்பது வேடிக்கையானது; பெரும்பொய். வடக்கில் பாலுணவுமற்றும்பொருள்கள் கிடைப்பதே கஷ்டமாக உள்ளது. யுனிசெப் அறிக்கையின்படி 340ஆயிரம் குழந்தைகள்வடக்குகிழக்கில்மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நாளொன்றிற்கு 704 கலோரிகொண்ட உணவு கிடைக்கிறது. அகதி ஒருவருக்கு நாளொன்றுக்கு ஒன்பது ரூபா பெறுமதியான உணவுவழங்கப் படுகிறது. புரதச்சத்துள்ளமீன் உணவு மற்றும் கடலுணவு வருடாந்தம் யாழ்ப்பாணத்திற்கு 6600 மெற்றிக் தொன் தேவை. யுத்த நிலையினால் 1991ஆம் ஆண்டில் 1094 மெற்றிக் தொன் கடலுணவு மட்டுமே பெறப்பட்டது. இது மக்களின் தேவையில் 16.6வீதமாகும்.

போஷாக்கின்மை எதிர்கால சந்ததி மீதான தாக்கமானது இன்றைய இராணுவ அட்டூழியத்தை விட மோசமானதாக இருப்பதாகவும் நவசமசமாஜக் கட்சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கைது

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்தவர் எனத் தன்னைக் கூறிக் கொண்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஐந்து பெண்களைத் திருமணம் செய்த ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

---

# தமிழகத்தில் கைதான இல. தமிழரை ஒரே சிறையில் வைக்க முடிவு

(சென்னை)

தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கைதுசெய்யப்பட்ட இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் ஒரே சிறையில் வைப்பதற்கு தமிழ்நாடு பாதுகாப்பு அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இவ்வாறு கைதானோர் தற்போது வெவ்வேறு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ராஜீவ் காந்தி கொலையையடுத்து தமிழ் நாட்டில் கைதாகி பல்வேறு சிறைகளிலும் வைக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் பலர் தப்பியோடிவிட்டதனாலேயே இவர்களைத் தனியான சிறையில் அடைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரே இடத்தில் கூடிய பாதுகாப்பை ஏற்படுத்த முடியும் என அதிகாரிகள் நம்புகின்றனர்.

இதற்கென செங்கல்பட்டு சிறை தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. சிறைச்சாலை மதில்சுவர் உயர்த்தப் படுகிறது.

## தமிழகத்திலிருந்து வெடிமருந்து கடத்தல்

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு தொடர்ந்தும் வெடிமருந்துகள் கடத்தப்படுவதாக தமிழக எதிர்க்கட்சி தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். இலங்கை தீவிரவாதிகள் தமிழ் நாட்டில் பல இடங்களில் பதுங்கியிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த தீவிரவாதிகளை தமிழக அரசு கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

---

அயோத்தியாவில்

## ஆலயமும், மசூதியும் விரைவில் கட்டப்படும்

– பிரதமர் நரசிம்மராவ்

அரசியல் கட்சிகளின் தலையீடு எதுவும் இல்லாமல் அயோத்தியாவில் ஆலயமும், மசூதியும் கட்டப்படும் என்று பிரதமர் நரசிம்மராவ் கூறியுள்ளார்.

கான்பூரில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், இவை இரண்டும் சமயத் தலைவர்களாலேயே கட்டப்படும் எனவும், அரசியலில் இருந்து மதத்தைத் தனிமைப்படுத்தும் குறிக்கோளை தமது அரசு கொண்டிருக்கிறது எனவும், இந்தக் குறிக்கோளை எட்டுவதற்குச் சட்டத்திருத்தம் கொண்டு வரப் படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் காங்கிரஸ் கட்சி எந்தவொரு மதத்திற்கும் எதிரானது அல்ல. ஆனால், அரசியலில் மதம் கலக்கப்படுவதை அது எதிர்த்து வருகிறது எனவும் அவர் எடுத்துரைத்தார்,

## கொலை

தென் ஆபிரிக்காவில் தேர்தலுக்கான திகதி குறிக்கப்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்செயல்களில் சுமார் 116 கறுப்பினத்தவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அடுத்த ஏப்ரல் 27ஆம் திகதியன்று தென்னாபிரிக்காவில் சகல இனத்தவர்களும் கலந்து கொள்ளும் தேர்தல் நடைபெறும் என்று கூறியுள்ள ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா இந்த வன்முறைகளுக்கு சிறிய அளவிலான குற்றவாளிகளின் குழுக்களே காரணமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# மண்ணைக் காப்பதோடு மொழியையும் காப்போம்

## அகரவரிசை வெளியீட்டில் இளங்குமரன்

[யாழ்ப்பாணம்]

மண்ணை, மக்களைக் காப்பாற்றப் போராடிக் கொண்டிருக்கும் எமது அமைப்பு, எமது மொழியைக் காப்பாற்றுவதிலும் உறுதியாக உள்ளது. இதன் நோக்கிலேயே தமிழ் வளர்ச்சிக் கழகம் உருவாக்கப்பட்டது.

இவ்வாறு, நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்ற நடைமுறைத் தமிழ் வழிகாட்டி அகர வரிசை நூல் வெளியீட்டு விழாவில் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசும்போது; ஓர் இனத்திற்கு அதன் மொழி விழி போன்றது. மொழியின் சிதைவு, இனத்தின் வீழ்ச்சிக்கே காரணமாகி விடும்.

மொழியிலே பிறமொழி சொற்கள் அதிகமாகி அவை வேற்று மொழியாகி விடுகின்றது. மலையாளம் இப்படித் தான் உருவாகியது.

இன்று அகராதி துணையின்றி தூய தமிழில் பேசுவோர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம் ஆனால் ஆங்கிலத்தில் மொழிக் கலப்பின்றி பேச இங்கு பலர் உள்ளனர்.

எமது மொழியில் ஆயிரக் கணக்கான பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. இவற்றை களைந்து தமிழைத் தூய்மைப் படுத்தவேண்டும்.

தமிழ்மொழியைச் சொல்லியே ஆட்சியமைத்த திராவிட ஆட்சியாளர்கள் மொழியைக் காப்பாற்ற முன்வரவில்லை என்று குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் திரு அ. துரைராசா அங்கு பேசும்போது,

இனத்தைப் பாதுகாப்பதற்காக போர் நடக்கும் வேளையில் இனத்தின் தனித்துவத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும். இந் நூலை வெளிக்கொணர்வதில் ஈடுபட்ட அறிஞர்களைப் பாராட்டுகிறேன் என்றார்.

கவிஞர் முருகையன் அங்கு மதிப்புரை யாற்றும்போது, இந்த முயற்சி தமிழ் மக்கள் அனைவராலும் வரவேற்கத் தக்கது என்றார்.

இந் நிகழ்வில் மேலும் பல அறிஞர்கள் கலந்துகொண்டு கருத்துரை நிகழ்த்தினர்.

நடைமுறைத் தமிழ் வழிகாட்டி அகரவரிசை நூலை, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. துரைராசா வெளியிட்டு வைக்க, அதனை ஜோசப்பிரான்ஸிஸ் அடிகளார் அவர்கள் பெற்றுக் கொண்டார். [தி]

இந்தியாவில் இருந்து திரும்பும்

## அகதிகளுக்கு வவுனியாவில் கொட்டில்கள் அமைப்பு

[வவுனியா]

தென்னிந்தியாவிலிருந்து அடுத்த மாத பிற்பகுதியில் இலங்கை திரும்பும் அகதிகளை தங்க வைப்பதற்காக வவுனியா ஆசிக்குளம் நலன்புரி நிலையத்திலும் கரம்பைமடுப்பகுதியிலும் பாரியகொட்டில்கள் கட்டப்படவுள்ளன. 7 குடும்பங்கள் ஒன்றாக தங்கக் கூடிய வகையில் இந்த கொட்டில்கள் அமைக்கப்படுகின்றன.

இதனிடையே கொழும்பு விவேகானந்தா முகாமிலிருந்து மட்டக்களப்பு சென்ற அகதிகளில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் வவுனியா வந்துள்ளனர். இவர்கள் ரயில்வே நிலையம் அருகில் உள்ள நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

## விதைநெல் விநியோகிக்க செயலகம் நடவடிக்கை

யாழ். செயலகம் காலபோக பயிர்ச் செய்கைக்கென சுமார் 1600 புசல் விதை நெல்லைக் கொள்வனவு செய்து விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்படி விவசாய திணைக்கள அதிகாரிகள் கிளிநொச்சியில் 600புசல் நெல்லையும் கூட்டுறவுத் திணைக்களம் வந்தளகொடையில் 1000 புசல் நெல்லையும் கொள்வனவு செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற விவசாய குழுக் கூட்டத்திலேயே மேற் கொள்ளப்பட்டது. (பா)

உ

யாழ். வண். கிழக்கு, கலட்டி

எச்சாட்டி மகமாரி அம்பாள் தேவஸ்தான

### வருடாந்த

# மகோற்சவம்

மேற்படி விழா 9-7-93-ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது என்பதனை அடியார்களுக்கு அறியத் தருவதுடன்,

புதிய இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி தந்த தமிழீழ காவல்துறையினருக்கும், திருவிழா உபயகாரர்

## சந்தனக்கடத்தல் வீரப்பன் சுற்றி வளைப்புக்குள்ளாம்

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் எனப்படும் வீரப்பனும் அவனுடைய குழுவினரும, பர்கூர் மலைப் பகுதியில் சுற்றிவளைக்கப் பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

தமிழகம், கர்நாடக மாநில அதிரடிப் படையினருடன், சிறப்பு எல்லைக்காவல்படைப் பிரிவையும் சேர்ந்த ஆயிரத்து இருநூற்றுக்கும் அதிகமான பொலிசார் நவீன துப்பாக்கிகளுடன் வீரப்பன் குழுவினரைச் சுற்றி முற்றுகையிட்டிருப்பதாகவும், இம் முற்றுகைக்குள் வீரப்பன் சிக்கி இருப்பதாகவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

### ஆதாரம் காட்டிப் பெறவும்

(கிளாலி)

பிரயாணிகளால் தவறவிடப்பட்ட சில பொதிகள் கிளாலி போக்குவரத்து காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இப்பொதிகளை தவறவிட்டோர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உப தபால்

## ராஜன் நகர் பாடசாலை கையேற்கப்பட்டது

(வடமராட்சி)

வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் அம்பன் குடத்தனை ராஜன் நகரில் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலை ஒன்றை வடமராட்சி கல்விக் கோட்டம் கையேற்றுள்ளது.

கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம், மற்றும் கல்வி மேம்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. இளங்குமரன், விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு பாலகுமார், மக்கள் தொடர்பாளர் திரு. மறவன், டேவிட் அடிகளார், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் திரு. கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ்ஆரம்ப பாடசாலையை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை திறந்து வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை திரு. இளங்குமரனும் பாடசாலைக் கொடியை யாழ். கல்விப் பணிப்பாளரும் ஏற்றி வைத்தனர்.

ஐந்தாம் வகுப்பு வரை இயங்கும் இவ் ஆரம்பப் பாடசாலையின் அதிபராக திரு. ரகுநாதன் நியமிக்கப்பட்டார். பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் புத்தகங்களை திரு இளங்குமரன் வழங்கினார்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் திரு. இரா. சிவச்செல்வம் மேற்கொண்டார். [யோ]

## துப்பாக்கிகளை கடத்திய 3 இலங்கைத் தமிழர் கைது

தமிழகத்திற்குள் ஏ. கே.47 ரக துப்பாக்கிகளை கடத்தி வந்தமை தொடர்பாக இலங்கைத் தமிழர் மூவர் உட்பட பதினொருபேர் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் வேலூர் இலங்கைத் தமிழர் அகதிகளுக்கான முகாமில் தங்கியிருந்து தப்பிச் சென்ற சந்திரன் என்பவரும் ஒருவராவார்என்றும் கூறப்பட்டுள்ளது. இவர் ரெலோ அமைப்பைச் சேர்ந்தவர் என்றும், தமிழகத்திற்கு வருவதற்கு முன்பாக மன்னாரில் பன்னிரண்டு ஏ. கே. 47 ரகத் துப்பாக்கிகளை அவர்புதைத்து வைத்திருந்தார் என்றும், சமீபத்தில் வேலூரிலிருந்துதப்பிச் சென்று அவற்றில் ஏழு துப்பாக்கிகளை கடத்தி வந்து தமிழகத்தில் விற்க முனைந்தார் என்றும் பொலிசார் கூறியுள்ளனர்.

வன்னிப்

தொடர்ந்து இரவு8.00மணியளவில் வவுனியா கோட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு ஈழவண்ணன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகியது. வவுனியா கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் திரு. ரவி மங்கள விளக்கை ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து எட்டுக் கரும்புலிகளின் ஈகைச் சுடர்களும் ஏற்றிவைக்கப்பட்டன. முதலில் கரும்புலி லெப். கேணல் போர்க்கின் ஈகைச் சுடரை அவரது தாயார் ஏற்றி வைத்தார்.

கரும்புலிகளின் வரலாற்றை வன்னி கோட்ட கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் சிங்கன் வாசித்ததைத் தொடர்ந்து வவுனியாக் கோட்ட மகளிர் அமைப்பு அரசியல் பொறுப்பாளர் செல்வி கலையரசி, கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிபி, மாங்குள வட்ட மகளிர் பொறுப்பாளர் சுதா, வன்னி அரசியல்துறைப் பதில்பொறுப்பாளர் ஞானம், அரசியல்பயிற்சிக்கல்லூரிப் பொறுப்பாளர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் ஆகியோர் கரும்புலிகளின் தியாக உணர்வுகள் பற்றி உரை நிகழ்த்தினர். இறுதியில் கலை பண்பாட்டுக் கழக கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

நிவாரணப்

விவசாய பீட மாணவர்கள்

## கவனத்திற்கு

அனைத்து விவசாயபீட மாணவர்களும் இன்று பின்வரும் இடங்களில் இணைந்துகொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 1. | ஆரியகுளம் சந்தி | பி. ப. 1.00 |
| 2. | கோப்பாய் சந்தி | பி. ப. 1.15 |
| 3. | நெல்லியடி பஸ்நிலையம் | பி. ப. 2.00 |
| 4. | கொடிகாமம் பஸ் நிலையம் | பி. ப. 2-30 |
| 5. | கிளாலிக் கரையோரம் | பி. ப. 4.00 |

– விவசாய மாணவர் ஒன்றியம்

(5284) யாழ். பல்கலைக்கழகம்

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி
## மகேஸ்வரி விஜயநாதன்

பிறப்பு : 03-04-1932 இறப்பு : 08-06-1993

8-6-93 அன்று காலமான எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (8-7-93) வியாழக் கிழமை உடுவில் கிழக்கில் நடைபெறும். இவ் ஆத்ம சாந்தி வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

'துவாரகை' அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

அருமை மகள்,மகன்மார், மருமகன், மருமகள், அன்புப்பேரப்பிள்ளைகள்.

(5308)

நெஞ்சம் நெகிழும்

செய்து விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்படி விவசாய திணைக்கள அதிகாரிகள் கிளி/நொச்சியில் 600புசல் நெல்லையும் கூட்டுறவுத் திணைக்களம் வந்ளது.

மேற்படி தீர்மானம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற விவசாய குழுக் கூட்டத்திலேயே மேற் கொள்ளப்பட்டது. (பா)


உ

யாழ். வண். கிழக்கு, கலட்டி

எச்சாட்டி மகமாரி அம்பாள் தேவஸ்தான

## வருடாந்த

# மகோற்சவம்

மேற்படி விழா 9-7-93-ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது என்பதனை அடியார்களுக்கு அறியத் தருவதுடன்,

புதிய இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி தந்த தமிழீழ காவல்துறையினருக்கும், திருவிழா உபயகாரர்களுக்கும், அடியார்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- இடைக்கால நிர்வாகத்தினர்

[5310]



## சுருக்கெழுத்தாளர் பயிற்சி

01-07-93 ஆம் திகதி பத்திரிகையில் விளம்பரமான மேற்படி விடயம் தொடர்பாக,

அ. தட்டெழுத்தாளர் பயிற்சி (ஆங்கிலம்):

ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. தட்டெழுத்தாளர் பயிற்சி (தமிழ்):

தமிழில் திறமைச் சித்தியுடன் ஆங்கிலம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்'

16 - 25 வயதிற்கு உட்பட்டவர்கள் தாம் வதியும் இ. செ. கி. சங்க, பிரிவுத் தலைவர் / செயலாளர் சிபார்சுடன் தமது விண்ணப்பங்களுடனும், சான்றிதழ்களுடனும் எமது பணிமனையில் 12-7-93 (பிற்பகல் 2-00 மணிக்கு) நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

73, கண்டி வீதி, - கௌரவ செயலாளர்
யாழ்ப்பாணம்.
07-07-93

(சி-6972)



## அறிவித்தல்

யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசத் தலைவரின் திருமண வைபவம் 10-07-93 சனிக்கிழமை நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் பணியாளர்கள் திருமணத்தில் கலந்து கொள்ளவிருப்பதனால் அலுவலகம் திறக்கப்படமாட்டாது. 09-07-93ந் திகதி வெள்ளிக்கிழமை நடவடிக்கைகள் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

1821/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வ. விக்னேஸ்வரன்
பதில் மாவட்ட செயலாளர்,
யாழ். மாவட்ட சி.க.கூ. ச.சமாசம்.

(சி/6971)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 08-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## சந்தனக்கடத்தல் வீரப்பன் சுற்றி வளைப்புக்குள்ளாம்

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் எனப்படும் வீரப்பனும் அவனுடைய குழுவினரும, பர்கூர் மலைப் பகுதியில் சுற்றிவளைக்கப் பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

தமிழகம், கர்நாடக மாநில அதிரடிப் படையினருடன், சிறப்பு எல்லைக்காவல்படைப் பிரிவையும் சேர்ந்த ஆயிரத்து இருநூற்றுக்கும் அதிகமான பொலிசார் நவீன துப்பாக்கிகளுடன் வீரப்பன் குழுவினரைச் சுற்றி முற்றுகையிட்டிருப்பதாகவும், இம் முற்றுகைக்குள் வீரப்பன் சிக்கி இருப்பதாகவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

### ஆதாரம் காட்டிப் பெறவும்

(கிளாலி)

பிரயாணிகளால் தவறவிடப்பட்ட சில பொதிகள் கிளாலி போக்குவரத்து காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இப்பொதிகளை தவறவிட்டோர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

தென்புலோலி புற்றளை பாலர் பாடசாலை விளையாட்டு விழா 10 ஆம் திகதி சனிக்கிழமை புற்றளை விளையாட்டு மைதானத்தில் பெற்றார் சங்கத் தலைவர் திரு. சு. திருச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது.

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடகிழக்குமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க ஒருங்கிணைந்தநிர்வாக சபைக் கூட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது. (88)

### வார இறுதி ஆங்கில வகுப்புகள்

யா/மல்லாகம் மகா வித்தியாலயத்தில் வாரஇறுதி ஆங்கில வகுப்புக்கள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

ஜ ஐ.தே. வித்தது.

இந் நிலையில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதை கருத்திற் கொண்டே பிரிந்து விட்ட இக் கட்சியினர் இப்போது ஒன்றிணைய முயற்சிப்பதாகவும் பி.பி.ஸி மேலும் தெரிவித்தது.

இதேவேளை லலித் அத்துலத் முதலியின் மனைவி சிறிமாணி அத்துலத் முதலிதனது கணவர் தனது கட்சியை வளர்க்கவே தனது உயிரைக் கொடுத்தார் எனவும் தான் கட்சியில் இணைந்து பாடுபடதயாரெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை சிறிமாணி அத்துலத் முதலி கட்சி உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்படமாட்டார் என ஜி.எம். பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

### உப தபால்

வரை அதிகரிக்கும்என இலங்கை தேசிய உப தபாலதிபர்களின் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

வைத்தார்.

கரும்புலிகளின் வரலாற்றை வன்னி கோட்ட கலை பண்பாட்டுக்கழப் பொறுப்பாளர் சிங்கன் வாசித்ததைத் தொடர்ந்து வவுனியாக் கோட்ட மகளிர் அமைப்பு அரசியல் பொறுப்பாளர் செல்வி கலையரசி, கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிபி, மாங்குள வட்ட மகளிர் பொறுப்பாளர் சுதா. வன்னி அரசியல்துறைப் பதில்பொறுப்பாளர் ஞானம், அரசியல்பயிற் சிக்கல்லூரிப் பொறுப்பாளர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் ஆகியோர் கரும்புலிகளின் தியாக உணர்வுகள் பற்றி உரை நிகழ்த்தினர். இறுதியில் கலை பண்பாட்டுக் கழக கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

### நிவாரணப்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களினூடாக விநியோகிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 07-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10233

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3146, 24-6439, 27-6024, 28-0882, 40-7299
42-8316, 24-4153, 24-4707, 24-6699, 26-8497

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-2288, 24-6431, 26-4809, 27-4023, 24-2496
26-8419, 24-5958, 28-0587, 42-2317, 28-1020,
42-3726, 26-3345, 26-0355, 26-2585, 41-3460,
27-9649, 42-9625, 26-8917.


## "புத்தூக்கி" மென்பானத்தயாரிப்பாளர் அறிவித்தல்

மென்பானப் பிரியர்களே! மென்பான விற்பனையாளர்களே!

எமது "புத்தூக்கி" விற்பனவுப் பெருக்கம் கண்டு, உள்நோக்குடன், சில விசமிகளால், எமது மென் பானங்கள் பற்றி தப்பான வதந்திகள் பரப்பப்படுவதையிட்டு ஆழ்ந்த வேதனை அடைகின்றோம்.

வதந்திகளை நம்பி ஏமாறாமல், எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உள்ளூர் தொழில்வளம் பெருக தரமான பொருள்கள், வெளிவர, தங்களது ஆதரவை நாடுகின்றோம்.

எமது தயாரிப்புக்கள் மென்மேலும் தொழில் நுட்ப மேம்பாட்டுடன் வெளிவந்துகொண்டிருக்கிறது என்பதை அறியத் தருகின்றோம்.

ஆதரவுக்கு நன்றி

குறிப்பு: பான்ரா, கொக்கோ கோலா போன்ற 300 மி. லீற்றர் வெற்றுப் போத்தல் பெட்டியுடன் கொள்வனவு செய்யப்படும்.

பொதுமுகாமையாளர்
யாழ். பகுதி தெ. ப பொ. கூ. ச. கொத்தணி
யாழ்ப்பாணம் [சி-6975]



பிறப்பு : 03-04-1932

இறப்பு : 08-06-1993

8-6-93 அன்று காலமான எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (8-7-93) வியாழக் கிழமை உடுவில் கிழக்கில் நடைபெறும். இவ் ஆத்மசாந்தி வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

'துவாரகை' அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.


அருமை மகள், மகன்மார், மருமகன், மருமகள், அன்புப்பேரப் பிள்ளைகள்.

(5308)



நெஞ்சம் நெகிழும்
31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

## அந்தியேட்டி அழைப்பும்



## கார்த்திகேசு செல்லையா

(இளைப்பாறிய வைத்திய அதிகாரி பதுளை)

தோற்றம் : 10-02-1905

மறைவு : 08-06-1993

8-6-93 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திரு. கார்த்திகேசு செல்லையா (இளைப்பாறிய வைத்திய அதிகாரி பதுளை) அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், அனுதாப செய்திகள் அனுப்பியோருக்கும், எமக்கு பல வகையிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (8-7-93) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள், மைத்துனர்கள், மைத்துனிமார், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(5309)